செ.வெ.எண்.871 நாள்.23.11.2009

## பத்திரிக்கைச் செய்தி

## தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை 28.11.2009 (சனிக்கிழமை) காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குரோம்பேட்டை, சென்னையில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்த உள்ளது. பல்வேறு முன்னணி தனியார் நிறுவனங்களான TCS, HCL மற்றும் Sutherland தங்கள் BPOவிற்கும், Ford, Hyundai நிறுவனங்கள் ITI, Diploma முடித்தவர்களை அப்ரன்டிஸாகவும் மற்றும் நோக்கியா, Operator Trainee-யும் தேர்ந்தெடுக்க உள்ளனர். மேலும், 8ஆம் வகுப்பு முதல் B.A./B.Sc./B.Com., ITI, Diploma, Catering பயின்ற 18–25 வயதிற்குட்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க பல்வேறு நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. இம்முகாமில் கலந்து கொள்ள எவ்வித கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது. தங்கள் கல்விச் சான்றிதழ் மற்றும் புகைப்படம் ஆகியவற்றுடன் நேரில் வந்து கலந்து கொண்டு பயன்பெறுமாறு திரு.ஆ.சு.ஜீவரத்தினம், இ.ஆ.ப., ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்கள் கேட்டுக் கொள்கின்றார்கள். மேலும், விவரங்கள் துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. (www.employment.tn.gov.in)

ஒ.ம்/– ஆ.சு.ஜீவரத்தினம்
ஆணையர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9